# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. No. 43/2020**

**PW9**

| | | |
|---|---|---|
| Name | : | ஏழுமலை |
| Father's Name | : | ஆறுமுகம் |
| Village | : | சே.அகரம் |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.08.2025.

Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது சே .அகரம் கிராமத்தில் குடியிருந்து ஆவின் பால் செகரட்டிரியாக வேலை செய்கிறேன். கடந்த 24.04.2018 அன்று காலை 8.30 மணிக்கு சே.அகரத்தில் இருந்து நெடுங்காவடிக்கு நானும் என் நண்பர் ஐயனாரும் சென்றோம் . நெடுங்கவாடி - கன்னக்கந்தல் செல்லும் வழியில் தனஞ்செழியன் என்பவர் நிலத்திற்கு அருகில் செங்கம் போலிஸ் ஆய்வாளர் , 2 போலிசார் நின்றுகொண்டிருந்தார்கள். நான் அவர்களிடம் என்ன என்று விசாரித்தேன். அங்கு கொலை நடந்தது என்றும் அந்த இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து சாட்சியாக இருக்கிறீர்களா என்று கேட்டார்கள். நான் சம்மதித்து போலிசார் தாயார் செய்த பார்வை மகசரில் நானும் என் நண்பர் ஐயனாரும் கையொப்பம் செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவதுதான் அந்த பார்வை மகசர் . அது **அ.சா,ஆ.4.** அந்த இடத்தில் இருந்து ஒரு கவரில் ரத்தம் படிந்த மண்ணும் மற்றொரு கவரில் ரத்தம் படியாத மண்ணும் கைப்பற்றினார்கள். அதே இடத்தில் ரத்தக்கறை படிந்த பச்சை நிற கோடு போட்ட 4 முழ வெள்ளை வேட்டி ஒன்றும், குங்குமப்பொட்டு கலர் கொண்ட பாக்கெட்டுடன் உள்ள ஒரு ஜட்டியை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் . அதில் நானும் ஐயனாரும்

கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.5.** கைப்பற்றிய பொருட்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும் . ரத்தக்கறை படிந்த மண் கொண்ட பொட்டலம் **அ. சா.பொ.3.** சாதாரண மண் பொட்டலம் **அ.சா.பொ.4.** ரத்தக்கறை படிந்த பச்சை நிற கோடு போட்ட 4 முழ வெள்ளை வேட்டி **அ.சா.பொ.5.** குங்குமப்பொட்டு கலர் கொண்ட பாக்கெட்டுடன் உள்ள ஒரு ஜட்டி **அ.சா.பொ.6.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என் ஊருக்கும் போலிசார் கைப்பற்றியதாக சொல்லப்படும் இடத்திற்கும் இடையே 20 கி.மீ இருக்கும் என்றால் சரியல்ல. 5 கி.மீ இருக்கும். நான் போலிசாரை பார்த்தபோது வேறு வெளி நபர்கள் யாரும் அங்கு இல்லை . நானாகதான் போய் ஆய்வாளரிடம் என்ன என்று கேட்டேன். சம்பவம் நடந்த இடம் எது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. போலிசார் என்னை காவல் நிலையத்திற்கு வரவைத்து பார்வை மகசர் , கைப்பற்றுதல் மகசர் ஆகியவற்றில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. நான்சொன்ன நேரத்தில் பால் சொசைட்டி வேலையில்தான் இருந்திருந்தேனே தவிர சம்பவ இடத்தில் இருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல . நான் வேலையை முடித்துவிட்டேன். நான்சொல்வதுபோல் என் முன்னிலையில் பார்வைமகசர் தயாரிக்கவில்லை என்றும் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் முன்னிலையில் போலிசார்வழக்கு சொத்துக்களை கைப்பற்றி சீல் வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல . என் முன்னிலையில்தான் சீல் வைத்தார்கள். நான்போலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் அவ்வாறு என் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டதை சொன்னேனா என்றால் சொன்னேன் . நான் சொன்னதைபோலிசார் எழுதிக்கொண்டார்கள். நான் போலிசுக்கு சாதகமாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.